பத்திரிக்கை செய்தி

பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (போக்சோ) சட்டம் 2012 -இன் கீழ் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது தேவையான ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக "ஆதரவு நபர்கள் (Support Persons)" - 20 - பணியிடங்கள் கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி மதிப்பூதியம் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நிரப்பிட உள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கல்வித்தகுதி	மதிப்பூதியம்	ஆதரவு நபர் எண்ணிக்கை
● குழந்தைகள் உரிமைகள் அல்லது குழந்தைகள் பாதுகாப்பிற்காக பணியாற்றும் நபர்கள்/அமைப்புகள், ● சமூகப்பணி, சமூகவியல், சட்டம், உளவியல், குழந்தை வளர்ச்சி, சுகாதாரம் அல்லது கல்வித் துறைகளில் முதுகலைப் பட்டம் பெற்ற நபர் அல்லது குழந்தை பாதுகாப்பு/வளர்ச்சித் துறையில் 3 ஆண்டுகள் அனுபவமுள்ள பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.	ஒரு வழக்கிற்கு ரூ.10,000 /- (4 தவணைகளாக (தலா ரூ. 2,500/-) விடுவிக்கப்படும்)	20
(குறிப்பு: குழந்தை உரிமை மீறல் மற்றும் பிற குற்றவழக்குகள் உடையோர் விண்ணப்பிக்க இயலாது)		

முகவரி : மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
எண்.118, முதல் தளம்,
மாவட்ட ஆட்சியரகம்,
திருவள்ளூர் - 602 001.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்வி தகுதிக்கான அனைத்துச் சான்றிதழ்கள், புகைப்படம் மற்றும் அனுபவ சான்றிதழ்கள் போன்றவற்றின் நகல்களுடன் 16.11.2026 முதல் 30.11.2026 அன்று (அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள்) மாலை 5.45-க்குள் மேற்குறிப்பிட்ட அலுவலக முகவரிக்கு வந்து சேர வேண்டும். விண்ணப்பங்களை [https://tiruvallur.nic.in/] என்ற இணையதளத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களை படிவத்தில் சமர்ப்பிப்பதுடன், உரிய சான்றிதழ்களின் ஒளி நகலுடன் தபால் மூலமாகவோ அல்லது கொரியர் மூலமாகவோ குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் யாவும் முன் தகவலின்றி நிராகரிக்கப்படும். இது தொடர்பான எந்தவொரு கடிதப் போக்குவரத்தும் மேற்கொள்ளப்படமாட்டாது.

13/11/2026

மா.குடபாதி
திருவள்ளூர்.

தலைவர்/மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
திருவள்ளூர்.

Scanned with OKEN Scanner